

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 03.09.2026


# அறியாமையா? ஆணவமா?

**ஆ**ளும் கட்சி அமைச்சர்கள் பேச்சை அவைக் குறிப்பில் இருந்து நீக்கு வதைத்தான் பேரவைத் தலைவர் தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறார். இதுவரை வரலாறு காணாத மாற்றம் இது!

**‘சட்டப்பேரவையில் ஆதாரமின்றி பேசக்கூடாது’ என அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் ஆகியோரை மீண்டும் மீண்டும் பேரவைத் தலைவர் கண்டித்துக் கொண்டு இருக்கிறார். ஆனால் அவர்கள் அடங்கு வதாகத் தெரியவில்லை. தாங்கள் பேசுவதை ‘ரீல்ஸ்’ போட்டு பெரிய ஆளாகக் காட்டிக் கொள்வதற்காக அவர்கள் பேசும் பேச்சுகள் அருவருப்பாக உள்ளன. அவர்களது பேச்சில் ஆணவமும் வெளிப்படுகிறது. அவர்களது அறியாமையும் வெளிப்படுகிறது.**

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் துறை ரீதியான கேள்விகளை எழுப்புகின்றனர். அதற்கு, துறைரீதியான பதிலைச் சொல்ல வேண்டும். மாறாக அதனை அரசியல் ரீதியாக மாற்றி, மாட்டிக் கொள்கிறார்கள் அமைச்சர்கள்.

‘டாஸ்மாக்’ வழக்கு நீதிமன்றத்தில் உள்ள நிலையில், சட்டப்பேரவையில் அமைச்சர் நிர்மல்குமார் அது குறித்து பேசினார். இதற்கு, தி.மு.க. உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், பேரவைத் தலைவர் தடுத்தும் தொடர்ந்து அமைச்சர் நிர்மல்குமார் பேசினார். இதையடுத்து, பேரவைத் தலைவரே அவர்களைக் கண்டித்தார்.

**“நீதிமன்றத்தில் உள்ள வழக்கு குறித்தும், ஆதாரமில்லாத குற்றச்சாட்டை முன்வைத்தும் அமைச்சர்கள் பேசக்கூடாது” என பேரவைத் தலைவர் கண்டித்தார். “நேரலை செல்வதால் மக்கள் பார்த்துக்கொண்டிருப்பார்கள். எனவே கவனமுடன் செயல்பட வேண்டும்” என்று அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமாருக்கு கண்டிப்புடன் தெரிவித்தார் பேரவைத் தலைவர்.**

தனக்கு எல்லாம் தெரியும் என்பதைப் போல ஆதவ் அர்ஜுனா காட்டிக் கொள்வதற்காக அனைத்துக்கும் எழுந்து, பேசி, ‘தனக்கு எதுவும் தெரியாது’ என்பதை தினந்தோறும் அவைக்குக் காட்டி அவமானப்பட்டு வருகிறார்.

‘ஆதவ் அர்ஜுனா பேசினாலே பிரச்சினைதான் வருகிறது. அவரை அமைதியாக இருக்கச் சொல்லுங்கள்’ என்று உறுப்பினர் பிரேமலதா விஜயகாந்த் சொன்னார். இதை விட ஒருவருக்கு புத்திமதி சொல்லி இருக்க முடியாது. ஒருநாள் அவைக்கு ஆதவ் அர்ஜுனா வரவில்லை. ‘இன்று அவை அமைதியாக இருக்கிறது. இன்றாவது ஒன்றரை மணிக்கு முடித்து விடுங்கள்’ என்றும் பிரேமலதா விஜயகாந்த் சொன்னார். இதன் பிறகாவது ஆதவ் அர்ஜுனாவுக்கு சொரணை வந்ததா என்றால் இல்லை. ‘திருந்தாத ஜென்மம்’ என்பதையே இவர்கள் காட்டிக் கொள்கிறார்கள்.

த.வெ.க. அமைச்சர்களுக்கு அவை மாண்புகள், நடவடிக்கைகள் தெரியவில்லை. புதிதாக அவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறவர்கள் மிகுந்த கவனத்தோடு செயல்படுவார்கள். பார்த்துப் பார்த்து, பயந்து பயந்து பேசுவார்கள். ஆனால் த.வெ.க. அமைச்சர்களோ தெருவில் பேசுவதைப் போல பேசுகிறார்கள்.

**‘டாஸ்மாக்’ தொடர்பான வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் இருக்கின்றன. அதைப் பற்றி இவ்வளவு நேரம் அவையில் பேசலாமா என்பதுகூடத் தெரியவில்லை. ‘பாட்டிலுக்கு பத்து ரூபா’ என்ற பாட்டைப் பாடி, 41 பேரை உயிர்பலி வாங்கி விட்டு வந்தவர் தான் இன்றைக்கு முதலமைச்சராக இருக்கும் விஜய். ஆனால் இன்றைக்கு 20 ரூபாய், 30 ரூபாய் வசூலிக்கப்படுகிறது த.வெ.க. ஆட்சியில். ‘பத்து ரூபாயை ஊழியர்கள் வாங்குவது ஏன் தெரியுமா?’ என்று கேட்டு அதை நியாயப்படுத்திக் கொண்டு இருக்கிறார் அமைச்சர் விக்னேஷ்.**

‘ஊழியர்களுக்கு சரியான ஊதியம் இல்லை, கடை பராமரிப்பு செலவுக்கு பணமில்லை, அதனால் தான் பத்து ரூபாய் வாங்குகிறார்கள்’ என்று பேட்டியிலும் சொல்கிறார், பேரவையிலும் சொல்கிறார் அமைச்சர் விக்னேஷ். எந்தக் குற்றச்சாட்டை முன்பு வைத்தார்களோ, அதையே நாங்கள் செய்கிறோம் என்பதை ஒப்புக் கொள்வதாக இருக்கிறது அவரது பேச்சு.

ஒரு த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் ஜல்லிக்கட்டு போட்டியையே சமூகச் சீரழிவு என்கிறார். இன்னொரு த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தை கல்லூரி ஆக்குங்கள் என்று கோரிக்கை வைக்கிறார். ‘அரசு கல்லூரி கட்டணங்கள் அதிகமாக இருக்கிறது’ என்றும் இவரே சொல்கிறார்.

‘முதலமைச்சர் விஜய் முகத்தை எங்களால் பார்க்க முடியவில்லை. அதனால் ஸ்கிரீன் வையுங்கள்’ என்று கோரிக்கை வைக்கிறார் த.வெ.க. உறுப்பினர். முதலமைச்சர் விஜய் முகத்தை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டுமானால் அவர் எதிர்க்கட்சி வரிசைக்கு தான் வர வேண்டும். ‘பார்த்துக் கொண்டே இருக்கும்’ தண்டனையை அனுபவிக்கலாம். இன்னும் சிலர் பாட்டோடு வந்துவிடுகிறார்கள். மக்களுக்குத் தேவையானதை விட, ‘மீம்ஸுக்கு’ தேவையானது எது என இவர்களுக்குத் தெரிந்துள்ளது.

சட்டசபையில் என்ன பேச வேண்டும் என்பதை இவர்களுக்குச் சொல்லித் தர த.வெ.க.வில் யாருமில்லை. அவை முன்னவர் செங்கோட்டையன் இதை எல்லாம் கவனிக்கிறாரா எனத் தெரியவில்லை. ஆதவ் அர்ஜுனாவையும் நிர்மல் குமாரையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அவரே பல நேரங்களில் மாட்டிக் கொள்கிறார் என்பதே உண்மை.

**விவசாய நிலங்களை எடுக்க வேண்டியதிருப்பதால் பரந்தூர் விமான நிலையத்தை ரத்து செய்கிறோம் என்று முந்தைய நாள் மூச்சு முட்ட பேசுகிறது த.வெ.க. அரசு. அடுத்த நாள், ஓசூர் விமான நிலையம் தொடர்பான விவாதம் நடந்தது. ‘விவசாய நிலத்தை எடுக்காமல் விமான நிலையம் அமைக்க முடியாது’ என்று சொல்கிறார் அவை முன்னவர் செங்கோட்டையன். தனது கட்சி உறுப்பினர்களை ஒழுங்குப்படுத்த வேண்டிய செங்கோட்டையனே இப்படி பேசி மாட்டிக் கொண்டார்.**

**சட்டமன்றத்தை தங்கள் கட்சி மேடையாக நினைத்து, நினைத்ததை எல்லாம் பேசி, கேலிக்கூத்து ஆக்கிக் கொண்டு இருக்கிறார்கள் த.வெ.க. அமைச்சர்கள். ‘நேரலை’ மூலமாக இவர்களது அறியாமையும், ஆணவமும் தான் வெளிப்பட்டு வருகிறது.**

---

## சென்னை மெட்ரோ ரயிலில்

# ஆகஸ்ட் மாதத்தில் 1.04 கோடி பேர் பயணம்!

## மெட்ரோ இரயில் நிர்வாகம் தகவல்!

*சென்னை, செப். 3-*

*சென்னை மெட்ரோ ரயிலில் ஆகஸ்ட் மாதத்தில் 1,04,04,098 கோடி பேர் பயணம் செய்துள்ளதாக மெட்ரோ இரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.*

*அதிகபட்சமாக 14.8.2026 அன்று 4,01,607 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.*


*சிங்கார சென்னை அட்டையை பயன்படுத்தி 52,84,196 பேர், க்யுஆர் குறியீடு பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 20,20,687 பேர் பயணம் செய்துள்ளனர்.*

---

மதம் மனிதனை மிருகமாக்கும்!

சாதி மனிதனை சாக்கடையாக்கும்!

- தந்தை பெரியார்



---



வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கதிர் ஆனந்த், வேளாண் மற்றும் காலநிலை மண்டலத்தை அடிப்படையாக கொண்டு தமிழ்நாட்டில் விளையும் முக்கிய மசாலாப் பயிர்களான மஞ்சள், மிளகு, மிளகாய், கிராம்பு, மல்லி, ஏலக்காய், இஞ்சி, பூண்டு ஆகியவற்றின் பொருளாதார நிலை குறித்து சென்னை பல்கலைக்கழகத்தில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றுள்ளார். இதனையடுத்து, சென்னை அண்ணா அறிவாலயத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து ஆய்வறிக்கையைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். அதுபோது, கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

---

## அடிமைத்தனத்தை வீழ்த்திட வீறுகொண்டு எழுந்த

# பூலித்தேவரின் வீரத்தைப் போற்றுவோம்!



## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, செப். 3-**

**“அடிமைத்தனத்தை வீழ்த்திட வீறுகொண்டு எழுந்த பூலித்தேவரின் வீரத்தைப் போற்றுவோம்” என்று அவரது பிறந்தநாளையொட்டி எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ள தமது சமூக வலை தளத்தில் புகழாரம் சூட்டியுள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய தமிழ் மண்ணின் மாவீரர் பூலித்தேவரின் பிறந்த நாள் இன்று.**

**அடிமைத்தனத்தை வீழ்த்திட வீறுகொண்டு எழுந்த பூலித்தேவரின் வீரத்தைப் போற்றுவோம். அவர் புகழ் ஓங்கட்டும்!**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## த.வெ.க. அரசைக் கண்டித்து

# சென்னையில் விவசாயிகள் போராட்டம்!

*சென்னை, செப். 3-*

*முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடி என்ற வாக்குறுதியை நிறைவேற்றாத த.வெ.க. அரசைக் கண்டித்து சென்னையில் விவசாயிகள் காலவரையற்ற உண்ணாவிரதம் மற்றும் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.*

*ஆட்சிக்கு வந்தால் விவசாய கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என தேர்தல் பிரச்சாரத்தின் போது விஜய் வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் ஆட்சிக்கு வந்த பின், சொன்னபடி வாக்குறுதியை நிறைவேற்றாமல், மிக சொற்ப தொகையை மட்டுமே தள்ளுபடி செய்தார். இதற்கு விவசாயிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.*

*இந்நிலையில், முழுமையான பயிர்கடன் தள்ளுபடி என்ற வாக்குறுதியை நிறைவேற்றாத த.வெ.க. அரசைக் கண்டித்து சென்னையில் விவசாயிகள் காலவரையற்ற உண்ணாவிரதம் மற்றும் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 35 விவசாய சங்கங்கள் ஒருங்கிணைந்து இந்தப் போராட்டத்தை நடத்தி வருகின்றன.*

*எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகில், விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பு குழு தலைவர் நாராயணசாமி தலைமையில் போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், போராட்டத்திற்கு பந்தல் மற்றும் நாற்காலிகள் போட விவசாயிகளுக்கு காவல்துறை அனுமதி மறுத்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதற்கு விவசாயிகள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.*

---

## முரசொலி அறக்கட்டளை சார்பில்

# “முரசொலி செல்வம்” விருது!



கடந்த 21.10.2024 அன்று சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெற்ற ‘முரசொலி செல்வம் அவர்களின் படத்திறப்பு’ நிகழ்ச்சியில்,

“முரசொலி செல்வம் அவர்கள் பெயரால் ஆண்டுதோறும் விருது வழங்குவது; அதனை ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் முப்பெரும் விழா நிகழ்ச்சியில் வழங்கப்படும்” என திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவித்ததற்கிணங்க; ஏற்கனவே 2025ஆம் ஆண்டிற்கான “முரசொலி செல்வம்” விருது மூத்த பத்திரிகையாளர் திரு.ஏ.எஸ்.பன்னீர்செல்வம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக,



ஊடகவியலாளரும், எழுத்தாளருமான திரு. **ப.திருமாவேலன்** அவர்களுக்கு

2026ஆம் ஆண்டிற்கான ‘முரசொலி செல்வம் விருது’ வழங்கப்படும் என அறிவிப்பதில் முரசொலி அறக்கட்டளை மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது.

2026ஆம் ஆண்டிற்கான **‘முரசொலி செல்வம் விருது’** வருகிற 15-09-2026 அன்று மாலை 6.00 மணியளவில் சென்னையில் நடைபெறும் **‘தி.மு.க. முப்பெரும் விழா’** வில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் **திரு.மு.க.ஸ்டாலின்** அவர்களால் வழங்கப்படவிருக்கிறது.

**நாள் : 1.9.2026**

**முரசொலி அறக்கட்டளை**